துயர்மிகு சம்பவத்திலும் எடப்பாடி அரசியல் லாபம் பெறத் துடிக்கலாமா?

கரூரில் நடந்த கொடுந்துயரத்திற்குக் காரணம் என்ன!

வெளிப்படைத் தன்மையுடன் இயங்கும் அரசு இது!

அமைச்சர் தங்கம் தென்னரசு – சமூக வலைதளப் பதிவு!

சென்னை, அக். 1-

நிதி மற்றும் சுற்றுச் சூழல் கால நிலை மாற்றத் துறை அமைச்சர் தங்கம்தென்னரசின் சமூக வலைத் தளப் பதிவு வருமாறு:

எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிச்சாமி அவர்கள் வெளியிட்டிருக் கும் அறிக்கை அவரது பதட்டத்தை வெட்ட வெளிச்சமாகக் காட்டியிருக் கின்றது. எவ்வகையிலாவது இத்துயர் மிகு சம்பவத்திலிருந்து அரசியல் லாபம் பெற முடியுமா என்று துடியாய்த் துடிப்பது நாட்டு மக்களுக்கு நன்றாகவே தெரிகின்றது.

செய்தியாளர் சந்திப்பில் உண்மை கள் உணர்த்தப்படும் போது, அவரால் அதைத் தாங்கிக் கொள்ள முடியாமல் தத்தளித்து வழக்கம் போலவே ஓர் உளறல் அறிக்கையை வெளியிட்டுள்ளார். கரூரில் நடந்த கொடுந்துயரத்திற்குக் காரணம் என் னவென்பதை அரசு அமைத்திருக் கும் ஆணையமும் காவல் துறை

விசாரணை யும் முறையாக வெளிக் கொணரும் எனச் செய்தியாளர் களிடம் அரசு அதிகாரிகள் தெளிவாக எடுத்துக் கூறியுள்ள னர். நடைபெற்ற ஒரு பெரும் துயரச் சம்பவம் குறித் தான உண்மை நிலவரங்களை அரசின் உயர் அலுவலர்கள் நாட்டு மக்களுக்கு விளக்கிச் சொல்வதில் என்ன தவறு இருக்கின்றது? அரசின் முக்கிய அங்கமாக விளங்கும் அதிகாரிகள் பொறுப்புணர்வுடன் அத்தகு விளக்கங்களைச் செய்தி யாளர்கள் வாயிலாக வெகுமக்களுக் கும் சென்றடையச் செய்வது இத்தகுச் சூழலில் அவர்களின் கடமை என்பதை எதிர்க்கட்சித் தலைவர் தன் வசதிக்காக மறந்துவிட்டு அறிக்கை வெளியிட்டு இருக்கின்றார்.

நள்ளிரவில் செம்பரம்பாக்கம் ஏரியைத் திறந்து விட்டு, மக்களிடம் விளக்க மளிக்காமல் ஓடி ஒளியும் அதி முக அரசைப் போல இல்லாமல், வெளிப்படைத் தன்மையுடன் இயங் கும் அரசு இது என்பதைத் எடப்பாடி பழனிச்சாமி அவர்கள் முதலில் புரிந்துகொள்ள வேண்டும். அரசியல் ஆதாயம் தேடுவதைத் தவிர்த்து, பாதிக்கப்பட்டவர்களின் உணர்வு களை மதித்து நடந்துகொள்வது எதிர்க்கட்சிகளின் கடமையும் கூட என் பதை அவருக்கு நினைவூட்ட விரும்புகிறேன்.

இவ்வாறு அமைச்சர் தங்கம் தென்னரசு தனது வலைதளத்தில் குறிப்பிட்டுள்ளார்.

கனிமொழி கருணாநிதி எம்.பி. பேட்டி...

முதல் பக்கத் தொடர்ச்சி

அடிப்படையில் அனைவரும் மனிதர் களாக செயல்பட வேண்டும். இது போன்று நடந்த சம்பவத்தில் யார் மீது தவறு இருக்கிறது என்பது விசார ணையில் நிச்சயம் நிரூபிக்கப்படும். முதலமைச்சர் தெளிவாக தெரிவித்து இருக்கிறார் யார் மீது தவறு இருந்தா லும் நிச்சயம் நடவடிக்கை எடுக்கப்ப டும். அப்படிப்பட்ட சூழ்நிலையில் ப்ளே கேம் என்பதை ஆரம்பிப்பது தேவை யில்லாத ஒன்று தவறான ஒன்று. எப் படிப்பட்ட ஒரு சூழலாக இருந்தாலும் மனிதர்களோடு மனிதர்களுக்காக நாம் இருக்க வேண்டும்.

இதுவரை நான் பார்த்திராத ஒன்று!

தமிழக வெற்றி கழக தலைவர் கரூரில் நடந்த பிரச்சினைக்கு பிறகு ஒரு ஆறுதல் கூட சொல்லாமல் அந்த இடத்திலிருந்து புறப்படுவதோ தன்னு டைய பாதுகாப்பை மட்டும் நினைப் பதோ என்னை பொருத்தவரை நான் இதுவரை பார்த்திராத ஒன்று. அதை யும் தாண்டி அவர்களால் இருக்க முடி யவில்லை என்றால் கட்சியின் அடுத்த கட்ட தலைவர்கள் கூட உதவி செய்யாத ஒரு சூழ்நிலை பார்க்கும் போது மனிதாபிமானம் இல்லை என தான் தெரிகிறது . மற்ற கட்சித் தலை வர்கள் அனைவரையும் பார்க்க முடிந்தது அனைவரும் அங்கு வந்து ஆறுதல் தெரிவித்தார்கள்.

த.வெ.க. தலைவர் கரூர் விவகா ரம் தொடர்பாக 4 மணி நேரத்திற்கு பிறகு 'எக்ஸ்' தளத்தில் பதிவிடுகிறார், ஆதவ் அர்ஜுனன் எக்ஸ் தளத்தில் பதிவிட்டு விட்டு அதை டெலிட் செய்து இருக்கிறார்.

வன்முறையை தூண்டுவது போல் பேசுவதா?

மக்களைப் பற்றி அவர்களின் பாதுகாப்பை பற்றியும் அவர்களுக்கு ஆறுதலாக இருப்பதை பற்றி தான் யோசிக்க வேண்டும் இன்னும் பிரச் சினையை தூண்டுவது போல, வன் முறையை தூண்டுவது போல் பேசு வது நிச்சயமாக உச்சகட்ட பொறுப்பின்மை.

ஒரு பிரச்சினையை அமைதியாக் குவது தான் எந்த அரசியல் கட்சியாக இருந்தாலும் கடமை. வேறு எந்த இடத்திலும் வன்முறையை தூண்டக் கூடிய விதத்தில் உயிர் சேதமோ அல் லது வன்முறையை தூண்டுவதோ வேறு பேச்சுக்களை தவிர்க்க வேண் டும். அரசியல் ஆதாயம் தேடுகிறார் கள் என்று தான் நினைக்க முடியும்.

கரூர் விவகாரம் தொடர்பாக ஒரு தனிநபர் ஆணையம் அமைக்கப்பட் டுள்ளது அவர்கள் விசாரணையை மறுநாளே தொடங்கி இருக்கிறார்கள். அதைத் தாண்டி எப்படிப்பட்ட விசார ணைகள் வேண்டும் என அவர்கள் நினைக்கிறார்கள் என்று எனக்கு தெரி யவில்லை.

இவ்வாறு கனிமொழி கருணாநிதி எம்.பி. பேட்டியளித்தார்.

தனது அரசியல் பலத்தைக் காட்ட

விஜய் திட்டமிட்டே பிரச்சாரத்தை தாமதப்படுத்தினார்!

'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் குற்றச்சாட்டு!

சென்னை, அக்.1

தனது அரசியல் பலத்தை காட்ட விஜய் திட்டமிட்டே தனது பிரச்சாரத்தை தாமதப்படுத்தி னார் என்று 'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் கூறப்பட்டு ள்ளது.

இதுகுறித்து 30.09.2025 தேதிய 'தினகரன்' நாளேடு தலை யங்கத்தில் கூறப்பட்டுள்ள தாவது:-

கரூரில் த.வெ.க. தலைவ ரும் நடிகருமான விஜய் பிரச்சா ரத்தில் இந்திய நாட்டையே உலுக்கி உள்ளது. கேரளா வுக்கு அடுத்தபடியாக தமிழ்நாட் டில் தான் படித்தவர்கள் அதிகம் என புள்ளி விவரங்கள் கூறு கின்றன. ஆனால், கேரளாவில் சினி மாவையும், அரசியலை யும் மக்கள் பிரித்து பார்க்கிறார் கள். தமிழ்நாட்டில் தான் இது சாபக்கேடாக அமைந்துள்ளது. திரை கவர்ச்சியை மூலதன மாக பயன்படுத்தி மக்களின் அரசியல் உரிமையை சுரண்ட முற்படும் நபர்களை எதிர்க்கவும் அடையாளம் காட் டவும் வேண்டியுள்ளது. அத னால் ரசிகர்கள் பின்னணியில் கால்பதித்தால் தமிழர்களின்

தினகரன்

செப்டம்பர் 30, 2025 செவ்வாய்க்கிழமை

தாமதத்தால் வந்த வினை

கரூரில் த.வெக தலைவரும் நடிகருமான விஜய் பிரசாரத்தில் 41 பேர் பலியானது, இந்திய நாட்டையே உலுக்கி உள்ளது. கேரளாவுக்கு அடுத்த துடியாக தமிழ்நாட்டில் தான் படித்தவர்கள் அதிகம் என புள்ளி விவரங்கள் கூறுகின்றன. ஆனால், கேரளாவில் சினிமாவையும், அரசியலையும் மக்கள் பிரித்து பார்க்கிறார்கள். தமிழ்நாட்டில் தான் இது சாபக்கேடாக அமைந்துள்ளது. திரை கவர்ச்சியை மூலதனமாக பயன்படுத்தி மக்களின் அரசியல் உரிமையை சுரண்ட முற்படும் நபர்களை எதிர்க்கவும் அடையாளம் காட்டவும் வேண்டியுள்ளது. அதனால் ரசிகர்கள் பின்னணியில் கால்பதித்தால் தமிழர்களின் உரிமைகளை அது கேடு விளைவிக்கும்.

உரிமைக்கு அது கேடு வினை விக்கும்.

இத்தனை உயிர்களை இழப்பதற்கு முக்கிய காரண மாக சொல்லப்படுவது விஜய், பிரச்சாரத்துக்கு குறித்த நேரத் துக்கு வராமல் மக்கள் கூட்டத்தை அதிகரிக்க செய்த தந்திரம் என பல்வேறு கட்சி தலைவர்கள், அரசியல் விமர்ச கர்கள் கூறி வந்தனர். இதையே போலீசார் விசாரணையில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இவ்வழக்கு தொடர்பாக நேற்று போடப்பட்ட எப்.ஐ.ஆரில் அதிர்ச்சி தகவல்கள் வெளியாகி உள்ளன.

விஜய் தன் அரசியல் பலத்தை காட்ட வேண்டும் என்றே 4 மணி நேரம் தாமத மாக வந்தார். இத னால் அக் கட்சி தொண்டர்கள் மரங்களி லும், கடை கொட்டகைகளிலும் ஏறி அமர்ந்தனர். மரக்கிளை முறிந்ததால் கீழே நின்றவர்கள் மீது விழுந்ததில் பலர் உயிரிழந் ததும், காயமடைந்ததும் கார ணமாக அமைந்துவிட்டது. மேலும், அக்கட்சியின் நிர்வாகி கள் புஸ்சி ஆனந்த், நிர்மல்குமார் ஆகியோரிடம் காவல்துறையினர் பலமுறை எச்சரித்தும் அவர்கள் கேட்க வில்லை.

பெண்கள், குழந்தைகள் நீண்ட நேரம் காத்திருந்தது, தண்ணீர் வசதி இல்லாதது நிலைமையை இன்னும் மோச மாக்கி விட்டது. காவல்துறை யினர் முழு பாதுகாப்பு அளித் துள்ளனர். பாதுகாப்பில் சமரசம் செய்து கொள்ளவில்லை. திட்ட மிட்டே விஜய்யின் பிரசாரம் தாமதமாக்கப்பட்டது. தங்கள் அரசியல் பலத்தை காட்ட வேண்டும் என்பதற்காக திட்ட மிட்டு பிரச்சாரம் தாமதம் செய் யப்பட்டதாக கூறப்படுகிறது. விதி முறை கள் சரியாக பின்பற்றப்பட வில் லை . தொண்டர் களை தமிழக வெற்றிக் கழ கத் தின் நிர்வாகிகள் சரியாக ஒழுங்குபடுத் தவில்லை. கூட்ட நெரிசலால் ஏற்பட்ட அழுத்தத்தால் மக்கள் உடல் நிலை சோர்வ டைந்தனர். கீழே விழுந்த வர்கள் மிதிபாடு களில் சிக்கி 11 பேர் உயிரிழந்தனர் என எப்ஐ ஆரில் கூறப்பட்டுள்ளது.

இதற்கிடையில் கரூர் நெரி சலில் 25 பேர் மூச்சுத் திணறி பலியானதாக உடற்கூராய்வு அறிக்கையில் கூறப்பட்டுள்ள தாக தகவல் வெளியாகி உள் ளது. உயிரிழந்தவர்கள், கடைசி 2, 3 நிமிடங்களில் மூச்சுவிட முடியாத நிலை ஏற்பட்டதா லேயே 25 பேர் பலியானதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. 10க்கும் மேற்பட்டோருக்கு விலா எலும்புகள் உடைந்து உள்ளு றுப்புகளில் பாதிப்பு ஏற்பட்டு உயிரிழந்ததாக கூறப்படுகிறது.

இச்சம்பவம் தொடர்பாக முதல்வர் மு.க.ஸ்டா லின் உத் தரவின்பேரில் உயர் நீதிமன்ற முன்னாள் நீதிபதி அருணா ஜெகதீசன் தலைமையில் ஒரு நபர் விசாரணை ஆணையம் கரூரில் நேற்று 2வது நாளாக விசாரணை நடத்தியது. சம்பவ இடத்தில் வைக்கப்பட்டுள்ள சி.சி.டி.வி. கேமராக்களையும் ஆய்வு செய்துள்ளதாக தெரிகி றது. கூட்ட நெரிசல் ஏற்பட்ட இடத்திலும் விசாரணை நடத் தப்பட்டுள்ளது. சம்பவ இடத்தில் பொதுமக்களி டம் இந்த விசார ணையை நீதிபதி மேற்கொண் டுள் ளார். ஆணையத்தின் முழு விசாரணை முடிவில் கொடூர சம்பவத்தின் முழு விவரமும் தெரியவரும். இதுபோன்ற துயர சம்பவம் தமிழ்நாட்டில் இனிமேல் நடைபெறாத வண் ணம், பல்வேறு கட்டுப்பாடு களை ஏற்படுத்தி மனித உயிர் களை காக்க வேண்டும் என்பதே அனைத்துத் தரப்பு மக்களின் பெரும் எதிர்பார்ப்பாக உள்ளது.

இவ்வாறு அத்தலையங்கத் தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சி
மின்துறை

மி. து. ந. க. எண். தேற்று /4173 / 2025

குறுகிய கால மின் ஒப்ப அறிவிப்பு

மண்டலம்-13, வார்டு - 170 ல் சர்தார் பட்டேல் சாலை முதல் ராஜீவ் காந்தி சாலை வரை மத்திய கைலாஷ் சந்திப்பில் 26 எண்ணிக்கை 9 மீ உயர தெரு விளக்கு மின் கம்பங்களை அகற்றி மற்றும் எல். இ. டி விளக்குகளுடன் கூடிய 66 எண்ணிக்கை 7 மீ உயர தெரு விளக்கு மின் கம்பங்கள் வழங்கி நிறுவும் பணிக்கு ஒப்பங்கள் மேற்பார்வை பொறியாளர் / மின்சாரம் அவர்களால் வரவேற்கப்படுகின்றன.

பணியின் மதிப்பு **ரூ. 66,13,600/-** முன் வைப்பு தொகை **ரூ. 66,150/-** ஆகும். ஒப்பந்ததாரர்கள் **https://tntenders.gov.in** இணைய தளத்தின் மூலம் விவரங்கள் தெரிந்து கொண்டு மின் ஒப்பத்தில் **10.10.2025** பிற்பகல் **02.15** மணிக்குள் பங்கேற்கலாம் **10.10.2025** பிற்பகல் **03.15** மணிக்கு ஒப்பங்கள் திறக்கப்படும்.

செ.ம.தொ.இ / 5450 / ஒப்பந்தப்புள்ளி / 2025

மேற்பார்வை பொறியாளர் / மின்சாரம்

தமிழ்நாடு மின் பகிர்மான கழகம்
மின்னணு ஒப்பந்தப்புள்ளி அழைப்பு அறிவிப்பு

ஒப்பந்த விவரக் குறிப்பீடு எண்	ஒப்பந்தப்புள்ளி கோரும் அலுவலர்	பணியின் பெயர்
M. 202	மே.பொ. / பொ.மே -III	Supply and Erection of UPS VRLA Batteries under buyback scheme

மின்னணு ஒப்பந்தப்புள்ளிகளின் (e-tender) பணி / பொருட்கள் சமர்ப்பிக்கும் / திறக்கப்படும் கடைசி நாள் மற்றும் இணையதளத்தில் காண பதிவிறக்கம் செய்யும் நாள் / நேரம் போன்ற முழு விவரங்களுக்கு கீழ்க்கண்ட இணையதளங்களை காணவும்: www.tntenders.gov.in/nicgep/app, www.tnpdcl.org, www.mstcecommerce.com/eprochome/tneb, www.tenders.tn.gov.in

செ.ம.தொ.இ/5461/ஒப்பந்தப்புள்ளி/2025

தமிழ்நாடு மின் உற்பத்தி கழகம்
மின்னணு ஒப்பந்தப்புள்ளி அழைப்பு அறிவிப்பு

ஒப்பந்த விவரக் குறிப்பீடு எண்	ஒப்பந்தப்புள்ளி கோரும் அலுவலர்	பணியின் விவரம்
177	மே.பொ. / கொ&நி / வ.செ.அ.மி.நி - 2	Supply of various sizes of reheater front plain tubes suitable for 600 MW Boiler

மின்னணு (e-tender) ஒப்பந்தப்புள்ளிகளின் பணி / பொருட்கள் சமர்ப்பிக்கும் / திறக்கப்படும் கடைசி நாள் மற்றும் இணையதளத்தில் காண பதிவிறக்கம் செய்யும் நாள் / நேரம் போன்ற முழு விவரங்களுக்கு கீழ்க்கண்ட இணையதளங்களை காணவும்: www.tntenders.gov.in/nicgep/app, www.tnpdcl.org, www.mstcecommerce.com/eprochome/tneb, www.tenders.tn.gov.in

செ.ம.தொ.இ/5465/ஒப்பந்தப்புள்ளி/2025

வேளாண்மை உழவர் தலத் துறை அமைச்சர் எம்.ஆர்.பன்னீர்செல்வம், கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் ஆகியோர் தலைமையில், நேற்று (30.09.2025) தலைமைச் செயலகத்தில், "தமிழ்நாட்டில் சம்பா பருவத்திற்கு தேவையான உரம் இருப்பு மற்றும் சீரான விநியோகத்தை உறுதி செய்வது குறித்து" வேளாண்மை மற்றும் கூட்டுறவுத் துறை அலுவலர்களுடன் ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் சத்யபிரதாசாகு, வ.தட்சிணாமூர்த்தி, நந்தகுமார், பி.முருகேஷ், பி.குமரவேல்பாண்டியன். மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்

அமைச்சர்கள் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் – கே.ஆர்.பெரியகருப்பன் தலைமையில்

வேளாண்மை - உழவர் நலத்துறை - கூட்டுறவுத் துறை - உர உற்பத்தி நிறுவனங்களுடன் ஆய்வுக் கூட்டம்!

சென்னை, அக்.1-

வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் எம். ஆர். கே. பன்னீர்செல்வம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கேஆர்.பெரிய கருப்பன் தலைமையில் "தமிழ்நாட்டில் சம்பா பரு வத்திற்கு தேவையான உரம் இருப்பு மற்றும் சீரான விநியோகத்தை உறுதி செய்வது" குறித்து வேளாண்மை - உழவர் நலத்துறை, கூட்டுறவுத் துறை அலுவலர்கள் மற் றும் உர உற்பத்தி நிறுவ னங்களுடன் 30.09.2025 அன்று ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

தமிழ்நாடு முதலமைச் சர் அவர்களின் உத்தரவின் படி, வேளாண்மை உற்பத் தியினை அதிகரித்திடவும், விவசாயிகளின் நலன் சார்ந்த பல்வேறு திட்டங் களை செயல்படுத்திடவும் தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின் றன. அவ்வகையில் ஒவ் வொரு ஆண்டும் குறுவை சிறப்புத்தொகுப்புத்திட் டம் செயல்படுத்தியது போன்றே நடப்பு ஆண்டி லும் "குறுவை சிறப்பு தொகுப்புத் திட்டம்" 82 கோடியே 77 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் டெல்டா மாவட்டங்க ளில் செயல்படுத்தப்பட்டு வருவதுடன், தமிழ்நாட் டில் முதன்முறையாக கார்/ குறுவை/சொர்ண வாரி பருவத்திற்கான "சிறப்புத் தொகுப்புத் திட் டம்" 132 கோடியே 17 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக் கீட்டில் டெல்டா அல்லாத மாவட்டங்களிலும் செயல் படுத்தப்படுகிறது.

முதலமைச்சர் அவர்க ளால் மேட்டூர் அணை, குறுவை சாகுபடிக்காக குறித்த தேதியான சூன் 12ஆம் தேதி திறக்கப்பட்டு தொடர்ச்சியாக பாசனநீர் வழங்கப்படுவதன் காரண மாகவும், தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் பெறப்பட்ட சாதகமான மழைப்பொழிவின் கார ணமாகவும் கார்/ குறுவை/ சொர்ணவாரி பருவத்தில் தற்போது வரை, 17 இலட்சத்து 25 ஆயிரம் ஏக்கரில் நெல் சாகுபடி மேற்கொள்ளப் பட்டு, அறுவடைப்பணி கள் நடைபெற்று வருவது டன், நெல் கொள்முதலும் முழுவீச்சில் மேற்கொள் ளப்படுகிறது.

தற்போது, சம்பா/ தாளடி/பிசானம் பருவ நெல் சாகுபடி மேற்கொள் வதற்கான பணிகள் தீவிர மடைந்துவரும் நிலையில், விவசாயிகளுக்குத் தேவை யான உரங்கள் தடையின் றிக் கிடைத்திட தேவை யான உரங்களை இருப்பு வைத்தல் மற்றும் சீரான விநியோகம் செய்தல் குறித்து வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச் சர் எம்.ஆர்.கே. பன்னீர் செல்வம் அவர்களும், கூட்டுறவுத் துறை அமைச் சர் கேஆர். பெரியகருப்பன் அவர்களும் இணைந்து நேற்று (30.09.2025) தலை மைச்செயலகத்தில், வேளாண்மை - உழவர் நலத்துறை, கூட்டுறவுத் துறை அலுவலர்கள் மற்றும் உர உற்பத்தி நிறுவ னங்களுடன் விரிவான ஆய் வுக்கூட்டம் நடத்தினர்.

நடப்பு ஆண்டு குறுவை (காரீப்) பருவத்தில் ஒன் றிய அரசு வழங்கவேண் டிய யூரியா, டிஏபி, பொட் டாஷ், காம்ப்ளக்ஸ் போன்ற உரங்களில் மீத முள்ள ஒரு இலட்சத்து 55 ஆயிரம் மெட்ரிக் டன் உரங்களை உடனடியாக வழங்கிட வேண்டியும், சம்பா பருவத்திற்கு கூடுத லாக ஒரு இலட்சத்து 20 ஆயிரம் மெட்ரிக் டன் உரங்களை வழங்கிட வேண்டியும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இந்தியப்பிரதமர் அவர்க ளிடம் கடிதம் வாயிலாக வலியுறுத்தினார். அதன் அடிப்படையில், தற் போது 12 ஆயிரம் மெட் ரிக் டன் யூரியா மட்டுமே கூடுதலாக வழங்கப்பட் டுள்ள நிலையில் மீத முள்ள உரங்களையும் ஒன் றிய அரசு உடனடியாக வழங்க மேலும் வலியுறுத் தப்படும்.

அக்டோபர், 2025 மாத உர விநியோகத் திட்டத்தின்படி உரங்க ளைப் பெற்று இருப்பு வைக்க அனைத்து நடவ டிக்கைகளும் மேற்கொள் ளப்பட்டுள்ள நிலையில், தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங் கள் மற்றும் தனியார் சில் லரை விற்பனை நிலையங் களில் மாவட்ட வாரியாக தேவைக்கு ஏற்ப யூரியா உள்ளிட்ட அனைத்து உரங்களையும் எவ்விதக் குறைவுமின்றி முறையாக விவசாயிகளுக்கு விநியோ கம் செய்திட அறிவுரை வழங்கப்பட்டது.

மேலும், உர உற்பத்தி நிறுவனங்கள் மாதாந்திர உர விநியோகத் திட்டத்தின்படி தமிழ் நாட்டிற்கு வழங்க வேண் டிய உரங்களை உரிய நேரத்தில் வழங்கவேண் டும் என்றும், கூட்டுறவு உரநிறுவனங்களான இஃப்கோ, கிரிப்கோ ஆகி யவை மாதாந்திர ஒதுக்கீட் டில் 80 சதவீதத்தை தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்க ளுக்கும், 20 சதவீதத்தை தனியார் விற்பனை நிலை யங்களுக்கும் வழங்கவும் அறிவுறுத்தப்பட்டது. தனி யார் உரநிறுவனங்கள் 40 சதவீத உரஒதுக்கீட்டினை தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்க ளுக்கும், 60 சதவீதத்தை தனியார் விற்பனை நிலை யங்களுக்கும் வழங்க அறி வுறுத்தப்பட்டது. தூத்துக்குடியிலுள்ள ஸ்பிக் உர நிறுவனம் தமிழ்நாட் டில் அமைந்துள்ளதால், உர விநியோகத்தில் அந்நி றுவனம் தமிழ்நாட்டிற்கு முன்னுரிமை அளிக்க வேண்டும் என்று கேட் டுக்கொள்ளப்பட்டது.

உர விற்பனை நிலை யங்களில், விற்பனை முனையக் கருவி (Point of Sale) வாயிலாக மட்டுமே உரங்களை விற்பனை செய்யவேண்டும் என்றும், முறையாக விவசாயி களுக்கு இரசீது வழங்கிட வேண்டும் என்றும், விற் பனை முனையக் கருவி இருப்பும், உண்மை இருப் பும் சரியாக இருப்பதை உறுதி செய்யவேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட் டது. மேலும், உரத் தேவை உள்ள விற்பனை நிலை யங்களுக்கு / கூட்டுறவு சங்கக் கிளைகளுக்கு கூடு தலாக இருப்பு உள்ள இடங்களிலிருந்து தேவை யான இடங்களுக்கு மாவட்டத்திற்குள்ளேயே உரங்களை மாறுதல் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டது.

இது தவிர, உரத்தேவை யினை நிறைவு செய்யும் வகையில் மாவட்டத்தி லுள்ள இருப்பை விடக் கூடுதலாக உரங்கள் தேவையிருப்பின் மாவட் டத்திற்கு வெளியிலுள்ள விற்பனை நிலையங்கள் / இருப்பு மையங்களில் தேவைக்கு அதிகமாக உள்ள உரங்களை மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக் கப்பட வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டது.

மேலும், சிறப்புக் கண் காணிப்புக் குழுக்களை (Special Inspection Squads) அமைத்து உர விற்பனை நிலையங்களில் திடீர் ஆய்வு மேற்கொள்ள அறி வுறுத்தப்பட்டதுடன், மானிய விலையில் வழங் கப்படும் யூரியாவை, வேளாண்மை தவிர இதர பயன்பாட்டிற்கு வழங்கு தல், கலப்படம் மற்றும் போலி உரங்களை விற் பனை செய்தல், விதிமுறை களை மீறி உரங்களைப் பதுக்கிவைத்தல் போன் றவை நிகழாமல் தொடர் கண்காணிப்பு மேற்கொள் ளவும், மீறும் பட்சத்தில் சட்டப்படி நடவடிக்கை எடுக்கவும் அறிவுறுத்தப் பட்டது. உரங்களை இருப்பு வைத்திருந்தும் ஆறு மாதங்களுக்கு மேல் விற்பனை செய்யாமல் இருக்கும் உர விற்பனை நிலையங்களைக் கண்ட றிந்து அவற்றின் உரி மத்தை சட்ட விதிமுறை களின்படி இரத்து செய் திட அறிவுறுத்தப்பட்டது.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் கூட்டுறவு, உணவு (ம) நுகர்வோர் பாதுகாப்பு துறையின் முதன்மை செயலாளர், சத்ய பிரதா சாகு, வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு செயலாளர், வ.தட்சிணா மூர்த்தி, கூட்டுறவு சங்கங் களின் பதிவாளர் க.நந்தகு மார், வேளாண்மைத் துறை இயக்குநர் பா. முருகேஷ், தோட்டக் கலை மற்றும் மலைப்பயிர் கள் துறை இயக்குநர் பெ. குமாரவேல் பாண்டியன், மற்றும் தொடர்புடைய துறைகளின் உயர் அலுவ லர்கள், மாவட்ட அலுவ லர்கள் மற்றும் உர நிறுவ னங்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

சென்னை கிழக்கு மாவட்ட திமுக கொளத்தூர் கிழக்கு பகுதி சார்பில் முன்னேற்றப் பாதையில் தி.மு.க.முப்பெரும் விழா புகழரங்கம் நேற்று அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலையில், பகுதி செயலாளர் ஐ.சி.எப். வ.முரளிதரன் தலைமையில் நடைபெற்றது. இதில் சுப.வீரபாண்டியன், திண்டுக்கல் ஐ.லியோனி, கழக இளம் பேச்சாளர் அகமது சுல்தானா ஆகியோர் சிறப்புரையாற்றினர். இப்பொதுக் கூட்டத்தில் இரா.கிரிராஜன் எம்.பி., ப.ரங்கநாதன், எ.நாகராசன் எம்.சி, கே.சந்துரு, சி.மகேஷ்குமார், சரிதாமகேஷ்குமார் எம்.சி, தேவஜவகர், எஸ்.பன்னீர்செல்வம், வானவில் விஜய், உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.